**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**குற்றவியல் நடுவர்(மு.கூ,பொ). முதுகுளத்தூர்**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 07 ம் நாள் சனிக்கிழமை**
குற்றவியல் பல்வகை மனு எண். 63/2026

1. லெட்சுமணன் (39/26),
த/பெ. பஞ்சநாதன் (எ) வெள்ளைசாமி,
460/1, நடுத்தெரு,
கீழத்தூவல்,
முதுகுளத்தூர் தாலுகா ... மனுதாரர்/ எதிரி

//எதிராக//

தமிழக அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
கீழத்தூவல் காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்
குற்ற எண். 31/2026
U/s. 4(1)(A) TNP Amendment Act ... எதிர்மனுதாரர்
/குற்றமுறையிடுபவர்.

இம்மனுவானது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரமேஷ்குமார், B.A., B,L., அவர்களும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 2 திரு. சொக்கேசன் அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்......

**உத்தரவு**

மனுதாரர் /எதிரி தரப்பில் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹீதா பிரிவு 480 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர்கள் வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது. அவர் தன்னுடைய வாதத்தில் மனுதார் மீது 4(1)(A) TNP Amendment Act பிரிவு படி கடந்த 01.03.2026 ம் தேதி குற்றமுறையிடுவோரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், எதிரி குற்றமற்றவர் என்றும், நிரபராதி ஆவார் என்றும், மேற்படி வழக்குக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், மேற்படி எதிரி மிகவும் ஏழை குடும்பத்தை சேர்ந்தவர் ஆவார் என்றும், எதிரி சட்டத்தை மதித்து

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.07 13:40:00 +0530

நடப்பவர் என்றும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் சாட்சியத்தை கலைக்கவோ, வழக்கு விசாரணைக்கு தடங்கள் ஏற்படுத்தவோ மாட்டார் என்றும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் தகுந்த பிணையம் அளிக்க தயாராக உள்ளார் என்று மனு தாக்கல் செய்து மனுதாரர்/ எதிரியை பிணையில் விடும்படியும் கோரினார்.

2. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் எதிரியை கடந்த 01.03.2026 ம் தேதி கைது செய்யப்பட்டு தங்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதாலும், மேலும் இவ்வழக்கானது புலன்விசாரணையில் இருந்து வருவதாலும், எதிரி மீது கீழத்தூவல் காவல் நிலையத்தில் சரித்திர பதிவேடு எண்.251/2008–ன் படி பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து கண்காணித்து வருவதாலும், எதிரி மீது கீழத்தூவல் காவல் நிலையத்தில் குற்ற எண்கள். 32/2021, 129/2016, 100/2018, 126/2012, 4/2009, 58/2007, 107/2024 ஆகிய வழக்குகளும், முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 97/2025, 197/2023, 7/2022, 306/2021 ஆகிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், எதிரியானவர் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கு பிராந்தி பாட்டில்களை விற்பனை செய்து அவர்களது எதிர்கால வாழ்க்கையை சீரழிக்க வாய்ப்புள்ளதாலும், எதிரியின் செயல் மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கும் என்பதாலும், எதிரி இளைஞர்களுக்கு பிராந்தி பாட்டில்களை விற்பனை செய்து வருவதால் இளைஞர்கள் பிராந்தியை குடித்துவிட்டு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விடுவித்தால் இதனை சாதாரண குற்றமாக நினைத்து மீண்டும் மீண்டும் பிராந்தி பாட்டில்களை சட்டவிரோதமாக விற்பனை செய்ய வாய்ப்புள்ளது என்பதாலும் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகமல் தலைமறைவாகிவிடுவார்கள் என்பதாலும், எனவே எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவித்துள்ளார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

3. மனு, பதில் மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர்கள் கடந்த 01.03.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 07 நாட்களாக சிறைவாசம் அனுபவித்து வருகிறார் என்பதாலும்,

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:40:11 +0530

இவ்வழக்கின் சாட்சிகள் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரி போலீசாரை மிரட்டி சாட்சிகளை கலைக்க வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், எதிரிக்கு பிணை வழங்கினால் வழக்கின் விசாரணைக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு பிணையம் வழங்கி இந்த நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. எதிரிகள் தலா இரு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித்தர வேண்டும்.

2. எதிரி/மனுதாரர் பிணையில் விடப்பட்ட நாளிலிருந்து தினமும் காலை 10.30 மணிக்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில், ஆஜராகி 20 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

3. இதுபோன்ற குற்ற செயல்களில் மீண்டும் மனுதாரர்கள் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனை பேரிலும்.

4. சாட்சிகளை களைக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளக்கூடாது. விசாரணை காலத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

5. நீதிமன்றத்தில் விசாரணைக்காக தவறாமல் ஆஜராக வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (07.03.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:40:20 +0530

நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
முதுகுளத்தூர்.